2003 ஏப்ரல் 28]

மயானப் பாதை ஆகியவற்றிற்கு நிலத்தைக் கையகப்படுத்துவதற்காக, கையகப்படுத்தும் பணிகளுக்கு ரூ.44 இலட்சம் செலவு செய்யப்பட்டு, பல்வேறு பணிகள் முடிவடைந்துள்ளன. இப்போது நடப்பு ஆண்டிற்கு மாண்புமிகு அம்மா அவர்கள் கூடுதலாக ரூ.103.50 இலட்சம் நிதியை ஒதுக்கித் தந்திருக்கிறார்கள். ஆகவே நிதியை ஒதுக்கித் தந்ததன் விளைவாக, எங்கெல்லாம் இந்தமாதிரி பிரச்சினை—தனியார் நிலத்தில் மயானப் பாதை—இருக்குமேயானால் அந்தத் தனியாரிடத்தில், அந்த நில உரிமையாளரிடத்தில் நிதியைக் கொடுத்து முறையாகப் பாதையை ஆர்ஜிதம் செய்து, அந்தப் பாதையை சீர் செய்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என்பதை மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 342, திரு. ஜெக. வீரபாண்டியன், மாண்புமிகு மின் மற்றும் தொழில் துறை அமைச்சர்.

342—

விவசாயிகளுக்குக் கரும்புத் தொகை வழங்கல்

***17808—திரு. ஜெக. வீரபாண்டியன்:**

மாண்புமிகு மின் மற்றும் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மயிலாடுதுறை என்.பி.கே.ஆர்.ஆர். கூட்டுறவுச் சர்க்கரை ஆலையில் கரும்பு விவசாயிகளுக்குக் கொடுக்கப்பட வேண்டிய கரும்புக்குரியத் தொகையை வழங்க அரசு எடுத்த நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன், மின் மற்றும் தொழில் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

மயிலாடுதுறை நடிப்பிசைப் புலவர் திரு. கே.ஆர். இராமசாமி கூட்டுறவுச் சர்க்கரை ஆலை, 2001-2002-க்கான, கரும்பு விவசாயிகளுக்குக் கொடுக்க வேண்டிய கரும்புப் பணத்தினை நிலுவை ஏதுமின்றி வழங்கிவிட்டது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. ஜெக. வீரபாண்டியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வணக்கம். ஆலையிலே இப்போது கொடுக்கக்கூடிய கரும்புகளுக்கு எல்லாம் 635 ரூபாய் statutory minimum price கொடுத்துக்

[2003 ஏப்ரல் 28

கொண்டிருக்கிறார்கள். ஆனால் 15 நாட்களுக்குள் கொடுக்கப்பட வேண்டிய தொகையை கிட்டத்தட்ட 2 மாதங்கள் வரை கொடுக்காமல் அவர்கள் இழுத்துவிடுகிற காரணத்தால் பக்கத்தில் இருக்கிற ஒரு தனியார் கரும்பு ஆலை நமது ஆலைகளுக்குப் போட்டியாக இருக்கிறது. அரசு ஆலைகளுக்கு, கூட்டுறவு ஆலைகளுக்குப் போட்டியாக இருக்கிறது. அவர்கள் உடனுக்குடன் நிலுவைத் தொகையைக் கொடுத்துவிடுகிற காரணத்தால், நாம் அவர்களோடு போட்டி போட்டுக்கொண்டு நஷ்டத்திலே ஓடிக்கொண்டிருக்கக்கூடிய அந்த ஆலையை தாக்குப்பிடிக்க வேண்டிய திறனும் சூழ்நிலையும் நமக்கு இருக்கிறது. ஆகையால், தற்போது நடிப்பிசைப் புலவர் கே.ஆர். இராமசாமி கூட்டுறவுச் சர்க்கரை ஆலைக்கு உள்ள மொத்தக் கடன் 111 கோடி ரூபாயாக இருக்கிற காரணத்தால் ஆலையை சரியாக் நடத்த முடியாத ஒரு சூழ்நிலை இருக்கிறது. அரசு இந்த ஆலையைச் சிறப்பாக நடத்துவதற்கு ஏதாவது திட்டம் வைத்திருக்கிறதா என்பதைக் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவா அவர்களே, கூட்டுறவுச் சர்க்கரை ஆலைகள் மற்றும் பொதுத் துறை சர்க்கரை ஆலைகள் எல்லாமே கடந்தகால திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலிருந்து தொடர்ந்து நட்டத்திலே இயங்கி வந்துகொண்டிருக்கின்றன. இந்த என்.பி.கே.ஆர்.ஆர். சர்க்கரை ஆலைக்கு 111 கோடி ரூபாய் நிலுவை இருக்கிறது. டன் ஒன்றுக்கு ரூ. 620.50 காசுகள் கொடுத்து வருகிறோம். விவசாயிகளுக்குக் கொடுக்க வேண்டிய பணத்தை எப்படியாவது நிலுவை பாக்கியில்லாமல் கொடுப்பதற்கு அரசினால் முயற்சிகள் மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. ஜெக. வீரபாண்டியன்.

(முற்பகல் 10-10

திரு. ஜெக. வீரபாண்டியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சர்க்கரை ஆலையிலேயிருந்து வருகின்ற கழிவிலேயிருந்து எத்தனால் தயாரிக்கின்ற முயற்சி இருந்தாலோ அல்லது மின்சாரம் தயாரிக்கின்ற முயற்சி இருந்தாலோ, நிச்சயமாக ஆலைகளை நல்ல நிலையில் கொண்டுவாலாம் என்று வல்லுநர்கள் கருத்து சொல்கிறார்கள். தமிழக அரசு, மயிலாடுதுறை, நடிப்பிசைப் புலவர் கே.ஆர். இராமசாமி கூட்டுறவுச் சர்க்கரை ஆலையின்மூலம் வெளியேறும் கழிவிலே, எத்தனால்

TRUTH ALONE TRIUMPHS

2003 ஏப்ரல் 28]

தயாரிக்கின்ற திட்டம், நமது அரசிற்கு இருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆலைகள் அனைத்தும் நட்டத்திலே இயங்கிவருகிற காரணத்தினால், எத்தனால் தயாரிக்கும் திட்டம் ஏதும் தற்போது இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. சி. ஞானசேகரன்.

திரு. சி. ஞானசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்.பி.கே.ஆர்.ஆர். கூட்டுறவுச் சர்க்கரை ஆலையினுடைய விவசாயிகளைக் குறித்து, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜெக. வீரபாண்டியன் அவர்கள் அருமையான கேள்வியைக் கேட்டிருக்கிறார்கள். இப்போது, மாண்புமிகு பிரதமர் அவர்கள்கூட, கரும்பு விவசாயிகளினுடைய பிரச்சினையை, அதிலும் குறிப்பாக, உத்தரப்பிரதேச மாநிலத்தினுடைய கரும்பு விவசாயிகளுடைய பிரச்சினையைக் கவனிப்பதற்காக, அதற்கு ஒரு கமிட்டியைப் போட்டிருக்கிறார்கள். தமிழ்நாடு கரும்பு விவசாயிகளினுடைய பிரச்சினையையும் அதிலே சேர்த்துக்கொள்வதற்கு, நம்முடைய மாநில அரசு பிரதமருக்குக் கடிதம் எழுதி, நம்முடைய பிரச்சினையையும் வலியுறுத்தி, கரும்பு டன் ஒன்றுக்கு ஆயிரம் ரூபாய் கொடுப்பதற்கு ஆவன செய்யுமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இது மூலக் கேள்விக்குத் தொடர்பற்றது.

வினா எண் 343, திரு. ஆர். சாமி, மாண்புமிகு மின் மற்றும் தொழில் துறை அமைச்சர்.

343—

துணை மின் நிலையம்

***19608—திரு. ஆர். சாமி:**

மாண்புமிகு மின் மற்றும் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—